பக்கங்கள்: 08 விலை : 20/-

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | பங்குனி 09 ஞாயிற்றுக்கிழமை 22.03.2020 | கதிர் 05

# சுவிஸ் போதகருக்கு கொரோனா உறுதி!

## உதவிப் போதகர் தகவல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 22

அரியாலை கண்டி வீதியில் அமைந்துள்ள பிலதெல்பியா தேவாலயத்தில் கடந்த 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆராதனையைத் தலைமை தாங்கி நடத்திய சுவிஸ்சர்லாந்து போதகர் போல் சற்குணராஜாவுக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை அவரது உதவிப் போதகர் யோசுவா ராஜநேசன் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்தத் தகவலை உறுதிப்படுத்திய முன்னாள் நாடாளுமன்ற 7



# வடக்கு 'சீல்'

## ஊரடங்கு நீடிக்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ்ப்பாணத்தில் கொரோனா நோயாளி ஒருவர் இனங்காணப்பட்டமையை அடுத்து வட மாகாணத்தை அரசாங்கம் முற்றாகச் 'சீல்' செய்திருக்கிறது. வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலிருந்தும் யாரும் வெளியேற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

இதே சமயம், வடமாகாணத்தில் நாளை காலை 6 மணி முதல் தளர்த்தப்படவிருந்த ஊரடங்கு நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை வரை நீடிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# 7,452 வேட்பாளர்கள் தேர்தல் களத்தில்!

எதிர்வரும் பொதுத் தேர்தலில் 7,452 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளனர். கொரோனா தொற்று அபாயமிருந்தாலும், அரசியல் கட்சிகளும், சுயேச்சைக்குழுக்களும் ஆர்வத்துடன் இம்முறை தேர்தல் களத்தில் குதித்துள்ளன.

மார்ச் 12ம் திகதி முதல் 19ம் திகதி வரையுமான வேட்புமனு காலத்தில் 7

# யாழ்ப்பாணத்தில் கொரோனாவுடன் முதல் நோயாளி!

- ★ இன்று அடையாளம் காணப்பட்டார்
- ★ சுவிஸ் போதகருடன் நெருங்கிப் பழகியவர்
- ★ ஆராதனையில் பங்கேற்றோரை உடன் தனிமைப்படுத்த தீவிர நடவடிக்கைகள்

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ்ப்பாணத்தில் முதலாவது கொரோனா நோயாளி இன்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் வந்து திரும்பிய சுவிஸ் போத கருடன் நெருங்கிப் பழகிய ஆண் ஒருவரே இவ்வாறு தொற்றுக்கு இலக்காகியுள்ளார். 7

# தேர்தல் நடத்த கடைசித் தினம் மே 30 தான்!

கொரோனா வைரஸ் அச்சுறுத்தலை விரைந்து கட்டுப்படுத்துவதில் ஆட்சிப்பீடம் வெற்றி காணுமானால் எதிர்வரும் மே30 ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்தக்கூடியதாக இருக்கும் என கொழும்பு 7

# கேப்பாபுலவில் தனிமைப்படுத்த குவியும் மக்கள்!

## இன்றும் 5 பஸ்களில் வந்தனர்




முல்லைத்தீவு, மார்ச் 22

கேப்பாபுலவு விமானப்படைத் தளத்தில் அமைந்துளள கொரோனா தடுப்பு தனிமைப்படுத்தல் மையத்துக்கு இந்தியாவில் இருந்து வருகைதந்த மேலும் ஒரு தொகுதி மக்கள் இன்று அழைத்துவரப்பட்டு தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் . 7

# அன்றாட உழைப்பாளர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை

## இன்று யாழ் செயலகக் கூட்டத்தில் அமைச்சர் தேவானந்தா தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 22

கொரோனா வைரஸின் தொற்று காரணமாக முடக்கப்பட்டுள்ள - நாளாந்த வருமானம் பெற்று குடும்ப வாழ்க்கையை முன்னெடுத்த -

# வெளிநாட்டிலிருந்து வந்த 48 பேருக்குக் கொரோனா!

கொழும்பு, மார்ச் 22

இலங்கையில், கொரோனா நோய்க்கு உள்ளான 77 பேரில் 48 பேர் வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது.

இந்த நபர்களுள் 69 பேர் அங்கொடை ஐடி.எச். வைத்தியசாலையிலும் 04 பேர் அநுராதபுரம் பொது வைத்தியசாலையிலும் 03 பேர் வெலிகந்த ஆதார வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனச் சுகாதார அமைச்சு உறுதி செய்துள்ளது.

இவர்களுள் 48 பேர் 7

# ஆராதனையில் பங்கேற்ற 137 பேர் தனிமைப்படுத்தல்!

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 22

அரியாலை கண்டி வீதியில் அமைந்துள்ள பிலதெல்பியா தேவாலயத்தில் நடந்த சுவிஸ்சர்லாந்து போதகரின் ஆராதனையில் பங்கேற்ற 137 பேர் அடையாளம் காணப்பட்டு அவர்களது வீடுகளில் சுய தனிமைப்படுதலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று 7

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு





# பதற்றம் வேண்டாம்; ஆனாலும் விழிப்புடன் இருங்கள்! கொரோனா தடுப்பு ஆலோசனை கூட்டத்தில் டக்ளஸ்

மனித உயிர்களைக் காவுகொள்ளும் கொரோனா என்ற வைரஸின் தாக்கம் யாழ்ப்பாணத்தில் இன்றைய நிலையில் ஆபத்துக் கட்டத்தை நெருங்காத போதிலும் அந்த நோய் பரவல் குடாநாட்டில் பரவாது தடுப்பதற்கான அனைத்து முன்னெச் சரிக்கை நடவடிக்கைகளிலும் நாம் தயாராக இருப்பது அவசியம் என்றும் அதற்கான அனைத்து விதமான தேவைப் பாடுகளுக்கும் முழுமையான ஒத்துழைப்புக்களை தரத் தாம் தயாராக இருக்கிறார் எனவும் தெரிவித்த கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இது குறித்து மக்கள் பதற்றப்பட தேவையில்லை என்றும் ஆனாலும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

உலகை அச்சுறுத்திக்கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் தாக்கம் யாழ்ப்பாணக் குடா நாட்டையும் அச்சுறுத்தத் தொடங்கியுள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவது தொடர்பான விசேட உயர்மட்டக் கூட்டம் ஒன்றை இன்று காலை யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துறைசார் தரப்பினருடன் விரிவாக ஆராய்ந்தறிந்து கொண்டார்.

மாவட்டத்தின் நிர்வாக மற்றும் சுகாதார உயரதிகாரிகள், படைத்தரப்பின் உயரதிகாரிகள், பொலிஸார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்ட இந்த உயர்மட்டக் கூட்டத்தில் நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்தறிந்துகொண்டபின் கருத்துக் கூறுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நோயைக் கட்டுப்படுத்த இலங்கைத் தீவு முழுவதும் பல்வேறு நடவடிக்கைகளை துறைசார் தரப்பினருடன் பாதுகாப்பு தரப்பினரும் இணைந்து முன்னெடுத்து வருகின்றனர்.

அத்துடன் தற்போது யாழ்ப்பாணத்தில் இந்நோய் பரவ வாய்ப்புள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிலையில் இந்த நோயை எதிர்கொண்டு எமது மக்களை பாதுகாக்க நாம் அனைவரும் ஒருமித்து முயற்சிகளை மேற்கொள்வது அவசியம். இதன்போது ஏதாவது தடைகள் மற்றும் இதர அசௌகரியங்கள் வருமாயின் சேவையை முன்னெடுக்கும் உங்களுக்கு ஒத்துழைப்புக்களை துறைசார் தரப்பினருக்கு தர நாம் தயாராக இருக்கின்றோம்.

தற்போது நாட்டில் ஓர் அவசர நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் நாடுமுழுவதும் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு மக்கள் செறிந்து செயற்பாடுகளை முன்னெடுப்பதை தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இதனால் நோய்ப் பரவலைத் தடுக்க முடியும் என சுகாதார துறையினர் கூறுகின்றனர். வடக்கின் குறிப்பாக யாழ் மாவட்ட நிலைமை தொடர்பில் பல தரப்பினரும் பல்வேறு கருத்துக்களையும் ஆலோசனைகளையும் முன்வைத்துள்ளீர்கள். குறிப்பாக கொரோனா தொற்று இருக்கலாம் என்ற சந்தேகத்தில் யாழ் பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள 9 நோயாளிகளில் பலர் குணமாகி வருகின்றனர் என யாழ் வைத்திய துறைசார் தரப்பினரால் தெரிவிக்கப்பட்டுள்ளமை ஒரு நற்செய்தியாகவே உள்ளது.

அத்துடன் அரியாலை பிலதெனியா தேவாலயத்தில் கடந்த 15ஆம் திகதி இடம்பெற்ற மதப் பிராத்தனை நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் அனைவரையும் கண்காணிப்பது முக்கியமானதாகும். இது தொடர்பிலும் ஆராயப்பட்டு அவர்கள் அனைவரும் இனங்காணப்பட்டு பரிகாரங்கள் கொடுக்க வேண்டும்.

அத்துடன் நாளை(23) ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்படவுடன் உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்ய பெருமளவில் மக்கள் கடைகளில் கூடுவதற்கான சந்தர்ப்பம் அதிகம் காணப்படுகின்றது.

இந்நிலையில் மக்களை குறித்த உயிர் கொல்லி தொற்றிலிருந்து பாதுகாப்பது, உணவுப் பொருள்களைத் தட்டுப்பாடு இன்றி வழங்குவது போன்ற விடயங்கள் தொடர்பிலும் துறைசார் தரப்பினர் சுட்டிக்காட்டியிருந்தனர்.

மேலும் அவசர தேவைகளுக்காக அதிகரிக்கப்படவேண்டிய அம்புலன்ஸ் சேவை, வடக்கின் அனைத்து மாவட்டங்களிற்கும் விரிவுபடுத்தப்படுவது மற்றும் அவசர கொரோனா தடுப்பு மையங்கள் அதற்கான ஆளணி மற்றும் இதர தேவைப்பாடுகளின் பற்றாக்குறை தொடர்பிலும் துறைசார் தரப்பினர் கூறிய கருத்துக்கள் ஊடாக அறிந்துகொள்ள முடிந்துள்ளது. எனவே இவை அனைத்தையும் துறைசார் தரப்பினருடன் ஆராய்ந்து அவற்றுக்கான தீர்வுகளை பெற்றுத்தர நடவடிக்கைகளை மேற்கொள்கின்றேன்.

அத்துடன் இந்நிலை தொடர்ந்தும் ஏற்பட்டுள்ளதால் நாளாந்தம் உழைத்து வாழும் குடுப்பங்களுக்கான நிவாரணங்களை வழங்குவது, அவை தொடர்பில் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சமுர்த்தி உள்ளிட்ட தரப்பினர் முன்னெடுக்க வேண்டிய பொறிமுறைகள் சம்பந்தமாக அந்தத் தரப்பினருக்கு அறிவுறுத்தல் கொடுத்திருந்தேன். அதுமட்டுமல்லாது யாசகர்களுக்கான பாதுகாப்பு மற்றும் அவர்களது உணவுத் தேவைகளைத் தீர்ப்பதற்கும் வழி வகைகள் ஆராயப்பட்டன. என அமைச்சர் தெரிவித்தார்.

# 338 பேர் கைது!

கொழும்பு, மார்ச் 22

ஊரடங்கு வேளையில் வீதிகளில் நடமாடிய குற்றச்சாட்டில் நாடுமுழுவதும் 338 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நாடுமுழுவதும் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு ஊரடங்குச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது.

கொழும்பு, கம்பஹா மற்றும் புத்தளம் மாவட்டங்களில் தற்போது நடைமுறையில் இருக்கும் ஊரடங்கு சட்டம் நாளைமறுதினம் மார்ச் 24ஆம் திகதி செவ்வாய் காலை6மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.



அன்றையதினம் காலை 6 மணிக்குத் தளர்த்தப்படும் ஊரடங்கு பிற்பகல் 2 மணிக்கு அம்மாவட்டங்களில் மீண்டும் ஊரடங்கு சட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் உட்பட ஏனைய மாவட்டங்களில் ஊரடங்கு சட்டம் நாளை திங்கட்கிழமை காலை 6 மணிக்கு நீக்கப்படுவதுடன், மீண்டும் பிற்பகல் 2 மணி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இம்மாவட்டங்களில் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு சட்டம் நாளை மறுதினம் செவ்வாய் காலை 6.00 மணி வரை நடைமுறையில் இருக்கும்.

ஊரடங்குச் சட்டம் நீக்கப்படும் எல்லா சந்தர்ப்பங்களிலும் நாடு முழுவதிலும் உள்ள மதுபானச் சாலைகள் மூடப்பட்டிருக்கவேண்டும் என அரசு அறிவித்துள்ளது.

விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மாவட்டங்களில் விவசாய சமூகத்துக்கு தங்களது பணிகளை தடையின்றி மேற்கொள்வதற்கு இடமளிக்குமாறு அரசு பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. (ஐ)



# சகல விமானங்களுக்கும் தடை

கொழும்பு, மார்ச் 22

கொரோனா வைரஸ் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்குப் பரவும் அபாயத்தைத் தடுக்கும் வகையில் அனைத்துப் பயணிகள் விமானங்கள் மற்றும் பயணிகள் கப்பல்கள் நாட்டுக்குள் வருவதை அரசு தடை செய்துள்ளது.

இந்தத் தகவலை ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவுவதன் காரணமாக நாட்டினுள் ஏற்பட்டுள்ள நிலைமை இயல்பு நிலைக்கு திரும்பும் வரை எக்காரணம் கொண்டும் இந்தத் தீர்மானத்தில் நெகிழ்வுத் தன்மைக்கு இடமில்லை என அரசு தெரிவித்துள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)





# வலி. மேற்குச் சந்தைகளுக்கு கிருமித் தொற்று நீக்கி விசிறல்

யாழ்ப்பாணம், மார்ச் 22

வலி. மேற்கு பிரதேச சபைக்கு உள்பட்ட சங்கானை பொதுச் சந்தை உள்ளிட்ட சந்தைகளில் கிருமித் தொற்று நீக்கி விசிறும் நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டுள்ளது.

சந்தை மற்றும் கடைத் தொகுதிகளுக்கு இவ்வாறு கிருமித் தொற்று நீக்கி விசிறப்பட்டன.

வலி. மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் நடனேந்திரன்தலைமையில்பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் பங்களிப்புடன் இந்த நடவடிக்கை இன்றுஞாயிற்றுக்கிழமை முற்பகல் தொடக்கம் முன்னெடுக்கப்படுகின்றன.

நாளை திங்கட்கிழமை காலை 6 மணிக்கு தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை ஊரடங்கு தளர்த்தப்படும்போது சந்தை வியாபார நடவடிக்கைகள் இடம்பெறுவதற்கு ஏதுவாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக வலி.மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் நடனேந்திரன் தெரிவித்தார். (ஐ - 07)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## தேர்தல் தாமதமானால் அரசமைப்பு நெருக்கடி

நாட்டின் அரசியல் தலைவிதியைத் தீர்மானிக்கும் பொதுத் தேர்தல் கொரோனா நோய்த் தொற்று அச்சத்தால் தள்ளிப் போயிருக்கின்றது.

அது சில சமயங்களில் ஓர் அரசமைப்புச் சிக்கலாக – முட்டுக்கட்டையாக – மாறக் கூடிய சூழ்நிலைகள் தென்படுகின்றன.

ஏப்ரல் 25ஆம் திகதி நடத்தப்பட்ட வேண்டிய பொதுத் தேர்தலை இப்போது தள்ளிப் போட்டாகிவிட்டது. அது குறித்த வர்த்தமானி அறிவித்தலை தேர்தல் ஆணையாளர் வெளியிட்டு விட்டார்.

பொதுத் தேர்தல் தொடர்பான தேர்தல் சட்டத்தின் 24(3) பிரிவின் கீழ் ஒரு தேர்தல் மாவட்டத்துக்கான தேர்தலை தேர்தல் ஆணையம் தள்ளி வைக்முடியும். இந்தக் சட்டப் பிரிவின் கீழ் நாட்டில் உள்ள 22 தேர்தல் மாவட்டங்களிலும் தேர்தல்களை ஆணையம் தள்ளி வைக்கலாம். இப்போது தள்ளி வைத்திருக்கின்றது.

இனி, இப்படித் தள்ளி வைக்கப்பட்ட தேர்தலை தேர்தல் ஆணையம் எப்போது நடத்தலாம்? எவ்வளவு காலம் தள்ளி நடத்தலாம்? – என்ற கேள்விகள் எழுகின்றன. அதையும் அதே தேர்தல் சட்டப் பிரிவு விளக்கின்றது.

அதன்படி, மேற்படி பிரிவின் கீழ் தள்ளி வைக்கப்படும் தேர்தலை 14 நாள்களுக்குப் பின்னர்தான் மீண்டும் தேர்தல் ஆணையம் நடத்தலாம். அதற்கு மேல் எத்தனை நாள்களுக்குப் பின்னர் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதற்கு எந்த சட்ட மட்டுப்பாடுகளும் இல்லை.

தேர்தல் ஆணையத்தின் சட்ட வியாக்கியானத்தின்படி இந்த 14 நாள்கள் என்பது 14 வேலை நாள்களாகும்.

ஏப்ரல் 25 ஆம் திகதிக்குப் பின்னர் வரும் நாள்கள் பல விடுமுறை தினங்களாகும். வெசாக் உட்பட பல அரச, வங்கி விடுமுறை நாள்கள் என்பதால் ஏப்ரல் 25 இற்குப் பின்னர் 14 வேலை நாள்கள் என்றால் மே 19 ஆம் திகதி தாண்ட வேண்டியிதுக்கும்.

எனவே, ஏப்ரல் 25 இலிருந்து தள்ளி வைக்கப்பட்ட தேர்தல் இனி நடத்தவதாயின் மே19 ஆம் திகதிக்குப் பின்புதான் அது சட்ட ரீதியாகச் சாத்தியம்.

ஆனால், நாடாளுமன்றத்தை முற்கூட்டியே கலைப்பதற்கான அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்கிய அரசமைப்பு, புதிய நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான விடயம் தொடர்பில் சில மட்டுப்படுத்தல்களை விதித்திருக்கின்றது என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் பிரகடனத்தை வெளியிடும் ஜனாதிபதி, அந்தக் கலைப்பு நடைமுறைக்கு வரும் தினத்தில் இருந்து மூன்று மாதங்களுக்கு மேற்படாத ஒரு தினத்தில் புதிய நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான பிரகடனத்தையும் சேர்த்து வெளியிட வேண்டும் என்று அரசமைப்பின் 70(5)(ஆ) பிரிவு வலியுறுத்துகின்றது.

அதன்படியேதான் தற்போதைய எட்டாவது நாடாளுமன்றத்தை முற்கூட்டியே கலைக்கும் உத்தரவை மார்ச் 2 ஆம் திகதி வெளியிட்ட ஜனாதிபதி கோட்டாபய, புதிய(ஒன்பதாவது) நாடாளுமன்றம் மே பதினான்காம் திகதி கூடும் எனத் திகதி நிர்ணயிந்திருந்தார்.

இந்த அரசமைப்பு ஏற்பாட்டின்படி, மார்ச் 2 ஆம் திகதி எட்டாவது நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமையினால், அடுத்த புதிய நாடாளுமன்றம் ஜூன் 2 ஆம் திகதிக்கு முன்னர் கூட்டப்பட வேண்டும்.

அப்படிக் கூட்டப்படவிட்டால் ஓர் அரசமைப்புக் குழப்பம் நாட்டில் ஏற்படும்.

தேர்தலைப் பொறுத்தவரை ஏப்ரல் 25 ஆம் திகதியிலிருந்து ஒத்திவைக்கப்பட்ட தேர்தலை இனி மே 19 ஆம் திகதிக்குப் பின்னர்தான் தேர்தல் ஆணையம் நடத்த முடியும்.

அரசமைப்புக் கடப்பாட்டின்படி கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் ஜூன் 2 ஆம் திகதிக்கு முன் கூட்டப்பட்டாக வேண்டும்.

ஆக, மே 19 ஆம் திகதிக்கும் ஜூன் 2 ஆம் திகதிக்கும் இடையில் பொதுத் தேர்தல் எப்படியும் நடந்து உடனடியாக புதிய நாடாளுமன்றம் கூடியாக வேண்டும். இந்த இரண்டு நாள்களுக்கும் இடையில் இரண்டு சனிக்கிழமைகள் வருகின்றன. அவற்றில் ஒன்றில் தேர்தலை நடத்த வேண்டும்.

அப்படித் தேர்தல் நடத்தக் கூடிய வாய்ப்பு ஏற்படாவிடில் அரசமைப்பு நெருக்கடி தவிர்க்க முடியாததாகி விடும்.

அப்படி ஒரு நெருக்கடி ஏற்பட்டால் அதனை நாடு எப்படி முகம் கொள்ளப்போகின்றது?

நாட்டின் சட்ட நிபுணர்களும், அரசியல் தலைவர்களும், உயர்நீதிமன்றமும் சேர்ந்து ஒரு வழியைத் தேட வேண்டியிருக்கும்.

# கல்முனை மாநகரப் பகுதியில் இன்று கிருமிநீக்கச் செயற்பாடு

## ஊரடங்குக்கு மத்தியிலும் மும்முரம்

(கல்முனைச் செய்தியாளர் சந்திரன் குமணன்)

கல்முனை,மார்ச்22

கல்முனைமாநகர சபைக் குட்பட்ட மக்கள் ஒன்று கூடும் பொது இடங்களில் கிருமிநீக்க செயற்பாட்டை மாநகர சபையின் தீயணைப்பு படை சுகாதார பிரிவு முன்னெடுத்துள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை (22) காலை முதல் – ஊரடங்கு சமயத்திலும் – இந்த கொரோனா வைரஸ் தொடர்பான விழிப் பூட்டலுடன் இச்செயற்பாடு ஆரம்பமானது. மாநகரப்பகுதியின் மத்திய பகுதி மத்திய பேரூந்து நிலையம், பஸ் தரிப்பு இடம் மற்றும் கடைத்தொகுதிகளில் வீதி வீதியாக கிருமிகளை நீக்கும் செயற்பாடு முன்னெடுக்கப் பட்டது.

கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீபின்வழிநடத்தலில்கோறானா வைரஸ் தொடர்பான அறிவுரைகளை பின்பற்றி பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதற்காக மாநகர சபையில் கொரோனா வைரஸ் தகவல் மத்திய நிலையம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

இங்கு கொரோனா வைரஸ் தொற்று சம்பந்தமான தகவல்கள், ஆலோசனைகளை பொது மக்கள் பரிமாறிக் கொள்ள முடியும். இத்தகவல் மத்திய நிலையமத்திற்கென 0672059999, 0767839995 எனும் அவசர தொலைபேசி இலக்கங்களும் அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.











# இந்தியாவில் இருந்து வந்த 298 பேர் இரணைமடுவுக்கு

கிளிநொச்சி, மார்ச் 22

இந்தியாவுக்கு யாத்திரை சென்ற 298 பேர் நேற்று இரவு 10.40 மணியளவில் புதுடில்லியில் இருந்து ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான யு.எல். 196 என்ற விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இதனையடுத்து அனைவரும் நேரடியாக இரணைமடு கொரோனா தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் இராணுவத்தினரின் பாதுகாப்புடன் பஸ்களின் மூலம் இரணைமடு கொரோனா தடுப்பு முகாமிற்கு நேற்றிரவே அழைத்துச் செல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப் படுகின்றது. (ஐ)

# கந்தளாயிலும் ஒருவருக்கு கொரோனா!

கொழும்பு, மார்ச் 22

திருகோணமலை – கந்தளாய் பிரதேசத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்கிய ஒருவரை இனங் கண்டுள்ளதாக கந்தளாய் தள வைத்தியசாலையின் பணிப்பாளர் கொஸ்தா தெரிவித்தார்.

ஜயந்திபுர, வான்எல,கந்தளாய் பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞனான இந்த நபர் ஹபரண பிரதேசத்திலுள்ள ஹோட்டலொன்றில் தொழில் புரிந்து வந்துள்ளார். இரண்டு நாள்களுக்கு முன்னர் விடுமுறையில் ஜயந்திபுரவுக்கு சென்றிருந்தபோது. காய்ச்சல் காரணமாக நேற்று கந்தளாய் தள வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சென்றார். இதன்போதே, கொறொனா வைரஸ் தொற்றுக்கிலக்காகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக கந்தளாய் தள வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதையடுத்து நேற்று மாலை 4.00 மணியளவில் மட்டக்களப்பு கொரோனா மத்திய பரிசோதனை நிலையத்துக்கு அவர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளார் என்றும் கந்தளாய் தள வைத்தியசாலையின் பணிப்பாளர் மேலும் கூறினார். (ஐ)

## நான்கரை வயதேயான சிறுமிக்கும் கொரோனா

இந்தியாவின் அசாம் மாநிலத்தில் கொரோனா வைரஸ் தொற்று முதல் தடவையாகக் கண்டறியப்பட்டுள்ளது. நான்கரை வயதுச் சிறுமிக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது.

ஜோர்ஹட் மாவட்டத்தைச் சேர்ந்த சிறுமிக்கு முதற்கட்ட சோதனையில் கரோனா தொற்று இருப்பதாக தெரியவந்துள்ளது என்று உதவி ஆணையர் ரோஷ்னி அபராஞ்சி கொராதி தெரிவித்தார்..

முதல் கட்ட சோதனையில் முடிவுகள் கொரோனா தொற்று இருப்பதாகக் காட்டினாலும் இரண்டாம் கட்ட ஆலோசனைக்காக குருதி மாதிரிகள் மீண்டும் திப்ருகர் மாவட்டத்தில் உள்ள ஐ.சி.எம்.ஆர் – ஆர்.எம்.ஆர்.சி சோதனைக்கூடத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதன் முடிவு என்ன என்பது திங்கள் மதியம் தெரியும் என்கிறார் உதவி ஆணையர் ரோஷ்னி.

இந்தக் குடும்பத்தினர் சமீபமாக பிஹாரிலிருந்து ரயிலில் ஜோர்ஹட்டில் உள்ள மரியானிக்கு வந்தவர்கள் என்று கூறப்படுகிறது.

## வீட்டுக்குள்ளே இருங்கள் ஆரோக்கியமாக இருங்கள்

### இந்திய மக்களுக்கு மோடி அறிவுரை



கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்கும் வகையில் இன்று ஒருநாள் இந்தியாவின் உள்முடக்கத்திற்கு அழைப்பு விடுத்திருந்த நிலையில், கொரோனா வைரஸுக்கு எதிரான நமது போர் வெற்றி பெறட்டும்,வீட்டுக்குள்ளே இருங்கள், பாதுகாப்பாக இருங்கள் என அறிவுறுத்தியுள்ளார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி.

மோடியின் அழைப்பை ஏற்று மக்கள் வீடுகளுக்குள் முடங்கியுள்ளனர். எச்சரிக்கையுடன் இருக்குமாறும், அதேவேளையில் தேவையற்ற அச்சத்தை தவிர்க்குமாறும், பதற்றத்தில் மருந்துகள் மற்றும் உணவுப் பொருள்களை வாங்கிக் குவிக்க வேண்டாம் என்றும் பிரதமர் மோடி கேட்டுக்கொண்டார்.

அதுமட்டுமல்லமல் கொரோனா வைரஸைத் தடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ள மருத்துவாகள், செவிலியாகள், மருத்துவமனை ஊழியர்கள், விமானப் பணியாளர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோரின் உழைப்பை போற்றும் வகையில் இன்று மாலை 5 மணியளவில் மக்கள் கைகளைத் தட்ட வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார்.

இன்று உள்முடக்கம் தொடங்குவதற்கு முன்பாக தனது ருவிட்டர் பக்கத்தில் கருத்துத் தெரிவித்த மோடி, இன்னும் சில நிமிடங்களில் மக்கள் ஊரடங்கு தொடங்கப்போகிறது. இந்த ஊரடங்கில் அனைவரும் பங்கேற்று, நம்முடையை வலிமையை, ஒற்றுமையை வெளிப்படுத்தி, கரோனா வைரஸை எதிர்த்து போராடி வெல்லவேண்டும். கொரோனாவைரஸைஎதிர்க்கொள்ள இப்போது எடுத்துவரும் நடவடிக்கைகள் எதிர்காலத்தில் உதவும். மக்கள் அனைவரும் வீட்டுக்குள்ளே இருங்கள், ஆரோக்கியமாக இருங்கள் எனத் தெரிவித்தார்.

# கீழடியில் கிடைத்தது மனித எலும்புக்கூடு

### தமிழர்களின் வரலாற்று சான்றுகளில் மீண்டும் முக்கிய அடைவு



தமிழ்நாடு மதுரைக்கு அருகில் உள்ள கீழடியிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் நடந்துவரும் அகழாய்வில் மனித எலும்புக்கூடு ஒன்று கண்டறியப்பட்டுள்ளது. கொந்தகை கிராமத்தில் இந்த எலும்புக்கூடு கிடைத்திருக்கிறது.

தமிழர்களின் வரலாற்றைப் பறைசாற்றும் வகையில் கீழடியின் ஆய்வு முடிவுகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. 2,600 ஆண்டுகளுக்கு முற்பட்டதானதமிழர்களின்வரலாற்றை இந்த ஆய்வுகள் வெளிப்படுத்தி வருகின்றன.

கீழடியில் ஏற்கனவே 5 கட்ட ஆய்வுகள் நடத்தி முடிக்கப்பட்ட நிலையில் 6ஆவது கட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆறாவது கட்ட அகழாய்வுப் பணிகள் பெப்ரவரி 19ஆம் திகதியன்று தொடங்கின. இந்த நிலையில், கொந்தகை பகுதியில் நடந்துவரும் அகழாய்வில் முதுமக்கள் தாழிகள், ஈமச் சடங்குகளுக்குப் பயன்படுத்தப்படும் மண்ணாலான பாத்திரங்கள், மணிகள் ஆகியவை கிடைத்து வந்தன.



அங்கு இதுவரை மூன்று குழிகள் தோண்டப்பட்டுள்ளன. முதல் குழியில் 2 முதுமக்கள் தாழிகளும், 2ஆவது குழியில் 8 முதுமக்கள் தாழிகளும், மூன்றாவது குழியில் 2 தாழிகளும் கிடைத்தன.

நேற்று நடத்தப்பட்ட அகழாய்வில் எலும்புக்கூடு ஒன்று கிடைத்திருக்கிறது. அந்தப் பகுதியில் வசித்தவர்கள் இரு விதங்களில் உடல்களைப் புதைத்துள்ளனர். ஒன்று தாழியில் வைத்து புதைத்தல். மற்றொன்று குழியைத் தோண்டிப் புதைப்பது.

குழி தோண்டிப் புதைக்கப்பட்ட உடலின் எலும்புக்கூடுகள் இப்போது கிடைத்திருக்கின்றன. தொல்லியல் ஆய்வுகளில் ஒவ்வொரு குழியாகத்தான் ஆய்வு நடக்கும் என்பதால், தற்போது தோண்டப்பட்டுள்ள குழியில் இடுப்பு வரையிலான பகுதிகளே வெளிப்பட்டிருக்கின்றன. அருகில் உள்ள பகுதியையும் தோண்டும்போது முழு எலும்புக்கூடும் கிடைக்கக்கூடும் என தெரிவித்தார் மாநில தொல்லியல் துறையின் இயக்குனர் சிவானந்தம்.

இந்த எலும்புக்கூட்டின் வயது, கீழடியில் கிடைத்த பொருள்களின் வயதை ஒத்ததாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. ஆனால், அவை பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட பிறகே துல்லியமாகத் தெரியவரும்.

கீழடியில் நடத்தப்பட்ட முதல் 5 கட்ட ஆய்வுகளிலும் எலும்புக்கூடுகள் எவையும் கிடைக்கவில்லை. ஆனால் ஆடு, மாடு, பூனைகளின் எலும்புகள் கிடைத்திருந்தன. இதனால் இந்தப் பகுதிகள் மனிதர்களுடையவைதானா என்கிற சந்தேகங்களையும் சில ஆய்வாளர்கள் எழுப்பி வந்தனர்.

மனித எலும்புகள் கிடைக்காத வரையில் அங்குள்ளவை தமிழர்களுக்குரியவை என்று கூறிவிட முடியாது என்கிற வாதமும் முன்வைக்கப்பட்டது. ஆனால், இதுவரையில் நடத்தப்பட்ட ஆய்வுகள் மனிதக் குடியிருப்புகளாக இருந்த இடங்கள் என்றும் புதையிடங்கள் தோண்டப்படும்போதே எலும்புகள் கிடைக்கும் என்று தொல்லியல் ஆய்வாளர்கள் தெரிவித்து வந்தனர்.

அதுபோன்று இப்போது புதையிடங்கள் அல்லது இடுகாடுகள் தோண்டப்பட்டு வருகின்றன. அங்கு மனித உடல் எச்சங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. கீழடி ஆய்வில் இவை மிக முக்கிய பங்கை வகிக்கும் என்ற கூறப்படுகின்றது.

இப்போது கண்டுபிடிக்கப்பட்டள்ள இரண்டு முதுமக்கள் தாழிகளில் உள்ள பொருட்களும் கவனத்துடன் வெளியே எடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போதுஆய்வுநடக்கும்கொந்தகை ஒரு புதைமேடு என கருதப்படுகிறது. கீழடி பகுதியில் வாழ்ந்தவர்கள் இங்குதான் புதைக்கப்பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது. மணலூர், அகரம் ஆகியவைமக்கள்வாழ்ந்தஇடங்களாகக் கருதப்படுகின்றன. ஒட்டுமொத்தமாக 120 ஏக்கர் பரப்பளவில் 50 லட்ச ரூபாய் செலவில் இந்த அகழாய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

2014ஆம் ஆண்டிலிருந்து 2017ஆம் ஆண்டுவரை முதல் மூன்று கட்ட அகழாய்வுகளை மத்திய தொல்லியல் துறை மேற்கொண்டது. இதில் 7818 தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன. அதற்குப் பிறகு இங்கு ஆய்வு நடத்த மத்திய அரசு முன்வரவில்லை. இதையடுத்து அடுத்தகட்ட அகழாய்வுகளை தமிழக அரசின் தொல்லியல் துறையே நடத்திவருகிறது.

## ரஜினியின் வீடியோவுக்கு ட்விட்டர் தடை விதிப்பு



நடிகர் ரஜினிகாந்த் கொரோனா குறித்து வெளியிட்டிருந்த வீடியோவை ட்விட்டர் நீக்கியது. தனது சட்டதிட்டங்களுக்கு அது பொருந்திப் போகவில்லை என்று தெரிவித்துள்ளது.

இந்தியாவில் கொரோனா பரவத் தொடங்கியிருப்பதை அடுத்து அங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை ஒரு நாள் உள் முடக்கத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்திருந்தது.

இதை இந்தி நடிகர்கள் பலரும் வரவேற்றுப் பதிவிட்டிருந்தனர். அதேபோன்று கொரோனா குறித்து விழிப்புணர்வு ஊட்டும் வகையிலான பதிவுகளையும் அவர்கள் வெளியிட்டிருந்தனர்.

நடிகர் ரஜினிகாந்த்தும் நேற்று சனிக்கிழமை கொரோனா குறித்து வீடியோ ஒன்றை வெளியிட்டிருந்தார். அதில், 12 – 14 மணி நேரம்வரை கொரோனா பரவாமல் தடுத்துவிட்டால், இந்தியாவில் மூன்றாம் நிலை பரவலைத் தடுத்துவிடலாம் என்ற கருத்தையும், வேறு சில கருத்துகளையும் தெரிவித்திருந்தார்.

அந்த வீடியோ அவரது ட்விட்டர் மற்றும் யு டியூப் பக்கங்களில் வெளியிடப்பட்டிருந்தது.

இந்த வீடியோ தங்களது விதிமுறைகளை மீறி இருப்பதாகக் கூறி ட்விட்டர் அந்த பதிவை நேற்று சனிக்கிழமை நீக்கியது. யு டியூபில் அதனைப் பார்க்கக் கிடைக்கிறது.

## முடங்கியது இந்தியா!

புதுடில்லி, மார்ச் 22

கொரோனா பாதிப்பை அடுத்து இன்று ஒரு நாள் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த உள்முடக்கத்தால் இந்தியாவின் அனைத்து நகரங்களும் வெளிசோடின.

உலகம் முழுவதையும் அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸின் தாக்கம் இந்தியாவிலும் கணிசமாக உணரப்பட்டுள்ளது. அங்கு இதுவரையில் சுமார் 300 பேர் நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர். 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொரோனா பரவுவதைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக இன்று ஞாயிற்றுக்கிழமை ஒரு நாள் உள் முடக்கத்திற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்திருந்தார்.

மக்கள் அனைவரையும் வீடுகளை விட்டு வெளியேற வேண்டாம் என்று அவர் கேட்டிருந்தார். வீடுகளுக்குள் இருப்பது மட்டுமல்ல இருக்கும் இடங்களிலேயே தொடர்ந்தும் தங்கியிருப்பது முக்கியம் என்றும் அவர் நேற்றுத் தனது ருவிட்டரில் தெரிவித்திருந்தார்.

இன்று காலையில் தொடங்கிய உள்முடக்கம் இந்திய பெருநகரங்கள் மற்றும் சிறுநகரங்கள் என்பவற்றை முழுமையாகச் செயலிழக்கச் செய்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். தெருக்கள் ஆள்நடமாட்டம் ஏதுமின்றிக் கிடப்பதாகவும் கடைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன என்றும் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

போக்குவரத்துக்கள் அனைத்தும் முற்றாக முடக்கப்பட்டுள்ளன. மிக அத்தியாவசியம் இருந்தாலன்றி மக்கள் வெளியே நடமாடுவதைத் தவிர்த்துள் ளனர். இன்று இரவு 9 மணிவரையும் இந்த உள்முடக்கம் நடைமுறையில் இருக்கும்.

# கொரோனாவின் நடுவிலும் ஏவுகணைப் பரிசோதனை

## அதிர்ச்சியூட்டும் வடகொரியா

சியோல், மார்ச் 22

கொரோனா வைரஸ் தாக்கத்தால் உலகமே ஆடிப்போயிருக்கும் நிலையிலும் ஏவுகணைப் பரிசோதனைகளை நடத்தி அதிர்ச்சியூட்டியிருக்கிறது வட கொரியா.

நேற்றையதினம் இரு ஏவுகணைகளை வடகொரியா வெற்றிகரமாகப் பரிசோதித்திருப்பதாக தென் கொரிய ராணுவம் கூறியுள்ளது.

இது குறைந்த தூர இலக்குகளை தாக்கவல்ல பாலிஸ்டிக் ரக ஏவுகணைகளாக இருக்கக் கூடும் என்று தென் கொரிய ராணுவம் கருதுகிறது.

தனது ராணுவத்தின் தொடர் பயிற்சிகளின் ஒரு பகுதியாக இந்த மாதத்தின் தொடக்கத்தில் வட கொரியா எண்ணற்ற ஏவுகணைகளைப் பரிசோதித்தது. இதைத்தொடர்ந்து வடகொரியா தனது அணு மற்றும் ஏவுகணை செயல்பாடுகளை நிறுத்துவது தொடர்பான பேச்சு வார்த்தையை மீண்டும் தொடங்க வேண்டுமென்று அமெரிக்கா, சீனா உள்ளிட்ட நாடுகள் அழைப்பு விடுத்தன.

ஆனாலும் உள்ளூர் நேரப்படி, நேற்று சனிக்கிழமை அதிகாலை மீண்டும் இரு ஏவுகணைகளை வடகொரியா பரிசோதித்துள்ளது.

தங்களது நாட்டின் தனிப்பட்ட பொருளாதார மண்டலத்துக்குட்பட்ட நீர்ப்பரப்பில் ஏவுகணை ஒன்று வந்திறங்கியதை ஜப்பானின் கடலோரக் காவல்படை உறுதிப்படுத்தியுள்ளது.


வட கொரிய அரசின் பல்வேறு நடவடிக்கைகள் குறித்து வரும் ஏப்ரல் 10ஆம் தேதி அந்நாட்டு நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.



சீனாவுடன் எல்லையைப் பகிர்ந்து கொள்ளும் வடகொரியா தனது நாட்டில் கொரோனா தாக்கம் ஏதுமில்லை என்று கூறுகின்றது. ஆனால், வட கொரிய தலைநகர் பியோங்யோங்கில் உள்ள பல்வேறு நாடுகளை சேர்ந்த 380க்கும் மேற்பட்ட தூதரக அதிகாரிகளை கொரோனா வைரஸ் அச்சத்தின் காரணமாக வட கொரிய அரசு 30 நாட்களுக்கு தனிமைப் படுத்தியது. மார்ச் மாதத்தின் தொடக்கத்தில் இந்த கட்டுப்பாடுகள் திரும்ப பெறப்பட்டவுடன் 80 வெளிநாட்டவர்கள் வட கொரியாவை விட்டு வெளியேறினர்.

அதேநேரம், வட கொரிய தலைநகர் பியோங்யோங்கில் கட்டப்பட இருக்கும் மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சியில் கிம் பங்கேற்றதாக கடந்த வாரம் செய்தி வெளியிட்டிருந்தது அந் நாட்டுத் தேசிய ஊடகம்.

## இணையத்தின் மூலமாக சூழலியல் விழிப்புணர்வு



### சிறுமி கிரேட்டா தலைமையில் ஆர்வலர்கள் நடவடிக்கை

கொரோனா வைரஸ் தாக்கத்தால் உலக நாடுகள் பாடசாலைகளை மூடிவிட்டதையடுத்து மக்களிடம் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை இணைத்தின் வழியாக ஏற்படுத்துவது என்று சுற்றுசூழல் ஆர்வர்கள் களமிறங்கியுள்ளனர்.

காலநிலை மாற்றத்திற்கு எதிராகவும் அது குறித்து நாடுகளின் அரசுகள் அக்கறை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் மேற்கு நாடுகள் சிலவற்றில் சிறு வர்கள் வகுப்பறையில் இருந்து வெளியே வந்து போராடினர்.

கொரோனா வந்து பாடசாலைகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ள நிலையில், இப்போது அவர் கள் இணைய வழியைத் தேர்ந்தெடுத்துள்ளனர். ஸ்வீடன் சிறு மியும் பிரபல சூழலியல் ஆர்வலருமானகிரேட்டாதுன்பர்க் இதை அறிவித்தார்.

ஃப்ரைடேஸ் ஃபார் ஃப்யூச்சர் என்னும் அமைப்பு, வெள்ளிக் கிழமைகளில் இணையவழிக் கருத்தரங்குகளை நடத்த ஆரம் பித்துள்ளது. நிபுணர்கள் மற்றும் ஆர்வம் கொண்ட மக்கள் இதற்கான வகுப்புகளை இளைஞர்களுக்கு எடுப்பர்.

"நம்முடைய தகவல்களைத் தெரிந்துகொள்ளவும் பகிர்ந்து கொள்ளவும் இதுவொரு நல்ல சந்தர்ப்பம்" என்று வெள்ளிக் கிழமை பேசிய கிரேட்டா தெரிவித்தார்.

இது தொடர்பான வாராந்திர பள்ளிப் போராட்டங்கள் Climate StrikeOnline என்ற ஹேஷ்டேகில் பகிரப்பட்டுவருகின்றது. .

பெல்ஜியத்தில் சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்னால், 4 ஆயிரம் பேருடன் காலநிலை மாற்றம் குறித்து கிரேட்டா பேரணி நடத்தினார். அத்தகைய போராட்டங்களுக்குத் தொடர்ந்து அவர் திட்டமிட்டிருந்த சமயத்தில் கொரோனா அனைத்தையும் முடக்கியது. .

# ஒரே நாளில் 1,500 பேர் உயிரிழப்பு!

## கொன்றொழிக்கிறது கொரோனா



லண்டன், மார்ச் 22

கொரோனா வைரஸால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை கடந்த ஓரிரு நாள்களில் அதிரடியாக உயர்ந்து செல்கின்றது. அதுபோன்று உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் எகிறிச் செல்கின்றது. இன்று மதியம் வரையான 24 மணி நேரத்திற்குள் சுமார் ஆயிரத்து 500 பேர் உயிரிழந்தனர்.

ஐரோப்பிநாடுகளிலேயேநோய்த் தொற்றும் இறப்பும் மிக வேகமாகப் பரவி வருகின்றது. எந்தவொரு நாடும் மிச்சம் இல்லை என்ற ரீதியில் 188 நாடுகளில் கொரோனாவின் தாக்கம் பரவியுள்ளது. 6 நாடுகளுக்கு நோய் புதிதாகத் தொற்றியிருப்பதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

இன்று பகல் வரை 3 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் நோய்த் தொற்றுக்குள்ளாகி இருக்கிறார்கள். இறப்பு எண்ணிக்கை 13 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

நோய்த் தொற்றுக்கு உள்ளாகுபவர்களின் எண்ணிக்கை மற்றும் இறப்பு விகிதத்துடன் ஒப்பிடும் போது தொற்றிலிருந்து மீண்டு குணமாகுபவர்களின் எண்ணிக்கை வீதம் மிகக் குறைவாகவே உள்ளது. இதுவரையில் சுமார் 95 ஆயிரம் பேர் குணமாகியுள்ளனர். 10 ஆயிரம் பேரின் நிலைமை தொடர்ந்தும் ஆபத்தானதாகவே உள்ளது.

இத்தாலியிலேயே மிக அதிகளவில் 4 ஆயிரத்து 825 பேர் உயிரிழந்துள்ளனர். சீனாவில் 3 ஆயிரத்து 255 பேரும் ஈரானில் ஆயிரத்து 556 பேரும் ஸ்பெயினில் ஆயிரத்து 378 பேரும் பிரான்ஸில் 568 பேரும் அமெரிக்காவில் 324 பேரும் பிரிட்டனில் 233 பேரும் நெதர்லாந்தில் 136 பேரும் தென்கொரியாவில் 102 பேரும் உயிரிழந்துள்ளனர்.

மலேசியா மற்றும் சிங்கப்பூரிலும் நேற்று முதல்முறையாக இறப்புக்கள் பதிவு செய்யப்பட்டன. மலேசியாவில் 8 பேரும் சிங்கப்பூரில் இரண்டு பேரும் உயிரிழந்துள்ளனர்.

கொரோனா தொற்று ஏற்பட்ட பின்னர் பொதுமக்களை ஒன்று கூட வேண்டும் என்று அறிவுறுத்திய நிலையிலும் சமய நிகழ்வு ஒன்றில் கூடிய பொதுமக்களுக்கே அதிகளவில் தொற்று ஏற்பட்டுள்ளதாக மலேசிய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. பல்வேறு இடங்களில் இருந்து வந்து அந்த நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிய பின்னர் அங்கும் தொற்றுப் பரவி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஈரானின் நெருக்கடிகள் 3 வாரத்தில் குறையும்

## அதிபர் ரவ்ஹானி தெரிவிப்பு



தெஹ்ரான், மார்ச் 22

கொரோனா வைரஸால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளில் ஒன்றான ஈரானில் நெருக்கடி நிலை மூன்று வாரங்களில் குறையும் என்று அந்நாட்டின் அதிபர் ஹசன் ரவ்ஹானி தெரிவித்துள்ளார்.

கொவிட் – 19 வைரஸ் தொற்றால் இறந்தவர்களின் எண்ணிக்கை ஈரானில் 1,556 ஆக அதிகரித்துள்ளது. 20 ஆயிரத்து 610 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இறப்பு விகிதம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் வெள்ளிக்கிழமை வழிபாடுகள் ரத்து செய்யப்பட்டன. பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்களும் மூடப்பட்டுள்ளன.

இந்த நிலையில் ஈரானில் நெருக்கடி நிலை விரைவில் சீரடையும் என்று அதிபர் ஹசன் ரவ்ஹானி தெரிவித்துள்ளார்.

ஈரானில் இந்த நெருக்கடி நிலை மூன்று வாரங்களில் குறையும். பொருளாதார உற்பத்தியை இயல்பு நிலைக்குக் கொண்டுவர தேவையான அனைத்தையும் செய்யவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

சீனாவின் ஹுபெய் மாகாணம் வுஹான் நகரில் கண்டறியப்பட்ட கொவிட் – 19 வைரஸ், 188 நாடுகளுக்குப் பரவியுள்ளது.

# வெளிநாட்டு விமானங்கள் தரையிறங்க பாக். தடை!

இஸ்லாமாபாத், மார்ச் 22

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக வெளிநாட்டு விமானங்கள் தனது விமான நிலையங்களில் தரையிறங்குவதற்கு பாகிஸ்தான் தடை விதித்துள்ளது.

பாகிஸ்தானில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 625ஐ எட்டியுள்ளது. இது வரை மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

இதையடுத்து நேற்றிரவு 8 மணி முதல் வெளிநாட்டுப் பயணிகள் விமானங்கள் சரக்கு விமானங்கள் எவையும் தனது நாட்டு எல்லைக்குள் தரையிறங்கக்கூடாது என்று பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், கொரோனா வைரஸ் மேலும் பரவுவதை தடுப்பதற்கும் பரிசோதனைகளுக்கான உபகரணங்களை வாங்குவதற்கும் என உலக வங்கி அளித்த கடனில் பயன்படுத்தப்படாமல் இருக்கும் தொகையில் சுமார் 4 கோடி அமெரிக்க டொலர்களை உடனடியாகச் செலவிடுவதற்கும் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தீர்மானித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கொரோனா: ராஜபக்ஷக்களுக்கு விழுந்த லொத்தர்?

- நிலாந்தன் -



தேர்தல் ஆணையாளர் தேர்தல் திகதியை பிற்போட்டிருக்கிறார். இயற்கை அனர்த்தச் சூழல், அசாதாரண நிலைமை, அவசர கால நிலைமை போன்றவற்றைக் காட்டித் தேர்தல் திகதியை மேலும் பிற்போடலாம். ஆனால் அரசாங்கம் அந்தத் திகதியை அதிக காலம் பிற்போட விரும்பாது. கொரோனா வைரஸை எவ்வளவு கெதியாகக் கட்டுப்படுத்த முடியுமோ அவ்வளவு கெதியாகக் கட்டுப்படுத்தவே அரசாங்கம் முயலும். எனவே கொரோனாவை எவ்வளவு கெதியாகக் கட்டுப்படுத்தலாம் என்பதுதான் தேர்தலை எப்பொழுது நடத்தலாம் என்பதைத் தீர்மானிக்கும்.

ராஜபக்ஷக்கள் ரைாணுவக் கரம் கொண்டு கொரோனாவை கட்டுப்படுத்துவார்கள். ஏற்கனவே யுத்தத்தை வெற்றி கொண்டது போல அவர்கள் கொரோனா வைரஸை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளையும் ஏறக்குறைய ஒரு யுத்த நடவடிக்கை போல முன்னெடுக்கத் தேவையான முன் அனுபவமும் இராணுவப் பண்பும் அவர்களிடம் உண்டு.

”எதேச்சாதிகார அரசுகளுக்கு கொரோனா



வைரஸ் ஒரு சுவர்க்கம்'' என்று மொஸ்கோவில் உள்ள ஒரு மேற்கத்தைய ராஜதந்திரி கூறியிருக்கிறார்.

முன்பு ரஷ்யாவின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஒன்றாகிய உக்ரேனின் அதிபர் செலென்ஸ்கி பின்வருமாறு கூறியிருக்கிறார்: – ”ஏனைய நாடுகளின் அனுபவம் எதைக் காட்டுகிறது என்றால் மென்மையும் சுதந்திரமும் கொரோனா வைரஸின் நண்பர்கள் என்பதைத்தான். எனவே உக்ரேனியர்களின் உயிருக்கும் ஆரோக்கியத்துக்குமாக நாங்கள் கடுமையான – உடனடியான பெரும்பாலும் அபகீர்த்தி குரிய – நடவடிக்கைகளை எடுப்போம்.”

மேற்படி கூற்றுக்கள் ராஜபக்ஷ ஆட்சிக்கும் பொருந்தும். எப்படி அவர்கள் யுத்தத்தை வெற்றி கொண்டார்களோ அப்படியே கொரோனா வைரஸையும் வெற்றிகொள்ளப் பார்ப்பார்கள்.

”பயங்கரவாதத்தின் மூலம் நாடு முழுவதையும் நிர்மூலமாக்கத் தயாரான தமிழீழ விடுதலைப் புலிகளைக் கூண்டோடு இல்லாதொழித்த எமக்குக் கொரோனா வைரஸ் சவால் அல்ல. அது இங்கு ஆட்கொண்டால் முற்றாக இல்லாதொழிப்போம்.” – என்று கூறியுள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல.

புலிகள் இயக்கமும் கொரோனா வைரஸும் ஒன்றல்ல என்பது வேறு விடயம். ஆனால் கொரோனா வைரஸை வெற்றி கொள்வது என்பது ராஜபக்ஷகளைப் பொறுத்தவரை தேர்தல் வெற்றிகளோடு தொடர்புடையது. இந்த வைரஸை மிக விரைவாக, அதிக சேதம் இன்றி வெற்றி கொள்வார்களாக இருந்தால் அடுத்தடுத்த தேர்தல்களில் அவர்களுக்கு அதைவிடச் சிறந்த பிரச்சாரம் இருக்காது.

வைரஸ் பரவத் தொடங்கிய புதிதில் அது அரசாங்கத்துக்கு ஒரு தடையாகத்தான் காணப்பட்டது. ஏனெனில் ஜெனீவாக் கூட்டத் தொடரை முன்வைத்து ஓர் இன அலையைத் தோற்றுவித்து, அதன்மூலம் அமோக வெற்றியைப் பெற அவர்கள் திட்டமிட்டிருந்தார்கள். ஜெனீவாத் தீர்மானத்தை எதிர்ப்பது, இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவிற்கு எதிரான அமெரிக்கப் பயணத் தடையை எதிர்ப்பது போன்றவற்றின் மூலம் அவர்கள் இன அலை ஒன்றை இலகுவாகத் உற்பத்தி செய்திருக்கலாம். ஆனால் கொரோனா வைரஸின் வருகை அந்த நிகழ்ச்சி நிரலைக் குழப்பி விட்டது. எனவேதான் வைரஸ் பரவுகிறதோ இல்லையோ அதுவரை பார்த்துக் கொண்டிருக்காமல் ஜெனீவாச் சூட்டோடு தேர்தலை வைத்துவிட அவர்கள் விரும்பினார்கள். அவ்வாறு அவர்கள் விரும்பியதற்கு முக்கியமான காரணம் எதிர்க்கட்சி பலமாக இல்லை என்பது.

யு.என்.பி. இப்பொழுதும் உடைந்து போயுள்ளது. கட்சிக்குள் தலைமைத்துவப் போட்டி முடிவுக்கு வரவில்லை. எனவே ஒரு தேர்தலை எதிர்கொண்டு ராஜபக்ஷக்களுக்குப் பலமான எதிர்ப்பைக் காட்ட அக்கட்சியால் இப்பொழுது முடியாது. இது ராஜபக்ஷக்களுக்கு சாதகமான ஓர் அம்சம். கொரோனாவை முன்வைத்து தேர்தலை ஒத்திவைத்தால் நிலைமைகள் ஒப்பீட்டளவில் மாறக்கூடும். புதிய நிலைமைகளுக்கு ஏற்ப யு.என்.பி. தன்னைப் பலப்படுத்திக் கொள்ளுமாக இருந்தால் அது ராஜபக்களுக்குச் சவாலாக அமையலாம். எனவே ஜனாதிபதி தேர்தலில் பெற்ற வெற்றியின் அலை தொடர்ந்து வீசும் ஒரு காலகட்டத்தில் தேர்தலை வைப்பதே நல்லது. அதனால்தான் அரசாங்கம் தேர்தலை ஒத்தி வைக்க விரும்பவில்லை. எனவே யு.என்.பி. தன்னைப் பலப்படுத்திக் கொள்வதற்கு இடையில் தேர்தலை வைப்பதற்கே அரசாங்கம் விரும்பியது. ஆனால் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு தேர்தல் திகதியைப் பின் தள்ளி விட்டது.

இனி அரசாங்கம் ஒரு யுத்தத்தை தொடங்க வேண்டும். அந்த யுத்தத்தில் அவர்கள் வென்று காட்ட வேண்டும். அந்த வெற்றி ஒன்றே அவர்களுக்கு போதும். தேர்தலில் கொத்தாக வாக்குகளை அள்ளலாம். எனவே இப்பொழுது உடனடியாக கொரோனாவுக்கு எதிரான யுத்தத்தை அவர்கள் தொடங்க வேண்டும். அதேநேரம் இப்போதுள்ள அசாதாரண சூழலை சாட்டாக வைத்து சாதாரண சிங்கள வாக்காளர்களைக் கவரும் விதத்தில் சலுகைகளையும் அறிவிக்கலாம். அப்படிப்பட்ட சலுகைகள் சிலவற்றை ஏற்கனவே அரசாங்கம் அறிவித்து விட்டது. பருப்புக்கும் மீன் ரின்னுக்கும் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. இவை சாதாரண ஜனங்களின் சாப்பாடுகள். இந்தச் சலுகையானது சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் அதிகம் எடுபடும். இவ்வாறான சலுகைகளை அறிவித்து விட்டு ராஜபக்ஷக்கள் கொரோனா வைரஸை எதிர் கொள்வார்கள்.

சிவில் தன்மைமிக்க ஓர் அரசு அரசாங்கம் இதுபோன்ற நெருக்கடிகளை கையாள்வதற்கும் ஓர் இராணுவ தனம் மிக்க அரசாங்கம் கையாள்வதற்கும் இடையில் வேறுபாடுகள் உண்டு. இராணுவப் பண்பு அதிகம் உடைய ஓர் அரசாங்கம் – அதிலும் குறிப்பாகப் படைத்தரப்புடன் மிக நெருக்கமான உறவை கொண்டிருக்கும் – ஓர் அரசாங்கம் இது போன்ற நிலைமைகளை விரைந்து கையாள முடியும்.

> **இராணுவப் பண்பு அதிகம் உடைய ஓர் அரசாங்கம் பெரும் தொற்று நோய்களையும் இயற்கைப் பேரழிவுகளையும் துணிச்சலாக எதிர்கொள்ளும். கிட்டத்தட்ட ஒரு யுத்தத்தை எதிர்கொள்வது போல அவர்கள் அந்த அசாதாரண சூழலை எதிர்கொள்வார்கள். சீனா அப்படித்தான் எதிர்கொண்டது.**

”நாய் பிடிப்பது போல நோய்த் தொற்றுள்ளவர்களைத் துரத்திப் பிடிக்க ஓர் அரசாங்கம் துணிந்தால் இலகுவாகக் கொரோனாவைக் கட்டுப்படுத்தலாம்” என்று ஒரு புலம் பெயர்ந்து வாழும் தமிழர் சொன்னார். இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட மேற்கத்தைய ராஜதந்திரியும் உக்ரேனின் ஜனாதிபதியும் சொல்ல வந்ததும் அதைத் தான்.

இராணுவப் பண்பு அதிகம் உடைய ஓர் அரசாங்கம் பெரும் தொற்று நோய்களையும் இயற்கைப் பேரழிவுகளையும் துணிச்சலாக எதிர்கொள்ளும். கிட்டத்தட்ட ஒரு யுத்தத்தை எதிர்கொள்வது போல அவர்கள் அந்த அசாதாரண சூழலை எதிர்கொள்வார்கள். சீனா அப்படித்தான் எதிர்கொண்டது. ஒருபுறம் சீனா துணிச்சலான முடிவுகளை எடுத்தது. இன்னொருபுறம் வரையறையின்றிக் காசை கொட்டியது. இதன் மூலம் நோய் பரவும் வேகத்தை அது கட்டுப்படுத்தியது.

சிங்கப்பூரும் அப்படிதான் நிலைமைகளைக் கட்டுப்பாடுக்குள் கொண்டு வந்தது.

2003 இலிருந்து சார்ஸ் என்று அழைக்கப்படும் வைரஸ் சிங்கப்பூர் குடிமக்களை தாக்கியது. அதில் கிட்டத்தட்ட 33 பேர் கொல்லப்பட்டார்கள். சார்ஸ் வைரஸின் அடுத்த கட்டக் கூர்ப்பே கொரோனா என்று கூறப்படுகிறது. சார்ஸ் வைரஸை வெற்றி கொண்ட அனுபவத்தின் அடிப்படையில் சிங்கப்பூர் கொரோனா வைரஸையும் ஒப்பீட்டளவில் விரைவாகக் கட்டுப்படுத்தியிருக்கிறது.

கிட்டத்தட்ட வடகொரியாவும் அப்படித்தான் நிலைமைகளை கையாண்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

மாறாக, தென் கொரியா அவ்வாறு கையாளத் தவறியதன் விளைவாக அங்கே நோய்த்தொற்று அதிகமாகியது என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இப்பொழுது ராஜபக்ஷக்களும் அதைத்தான் செய்யப் போகிறார்கள். இலங்கை ஒரு தீவாக இருப்பது அவர்களுக்கு அனுகூலமானது. கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்குப் பொறுப்பாக இராணுவத் தளபதி நியமிக்கப்பட்டிருக்கிறார். இதன் மூலம் கொரானாவுக்கு எதிரான நடவடிக்கைகளை அதிகம் இராணுவத் தன்மை மிக்கதாக அவர்கள் வடிவமைக்கக் கூடும். ஏற்கனவே நோய்த் தொற்று உடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் நபர்களுக்கான தனிமைப்படுத்தல் முகாம்களை – குறிப்பாகத் தமிழ் பகுதிகளில் – பெருமளவுக்குப் படைத்தரப்பே கையாண்டு வருகிறது. கிட்டத்தட்ட 22 தனிமைப்படுத்தல் முகாம்கள் நாடு முழுவதும் உருவாக்கப்பட்டிருக்கின்றன எனக் கூறப்படுகிறது. இவற்றில் ஆறு முகாம்கள் தமிழ் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. அவையாவும் படைத்தரப்பின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளன. இவ்வாறான நடவடிக்கைகளின் முடிவில் ஒரு கட்டத்தில் கொரோனா வைரஸை அரசாங்கம் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தும் போது புகழனைத்தும் படைத்தரப்புக்கே சேரும். அதோடு ராஜபக்ஷக்களுக்கும் சேரும்.

எனவே ராஜபக்ஷக்கள் வைரஸுக்கு எதிரான யுத்தத்தை ஒரு தேர்தல் பிரசாரமாக எடுத்துக் கொண்டு எதிர்கொள்வார்கள். இந்த யுத்தத்தில் அவர்கள் வெற்றி பெற்றால் அடுத்து வரும் எல்லா தேர்தல்களிலும் அந்த வெற்றியின் அலை வீசும். எனவே அவர்கள் இந்த யுத்தத்தை எப்படியும் வெல்லப் பார்ப்பார்கள். தேர்தல் பிரச்சாரத்துக்கு திறை சேரியிலிருந்து காசை எடுக்க முடியாது. அதை அவர்கள் தங்களுடைய கட்சி நிதியிலிருந்தோ, சொந்தச் சேகரிப்பில் இருந்தோதான் எடுக்க வேண்டும். ஆனால் கொரோனா வைரஸுக்கு எதிரான யுத்தத்தை அரச பணத்திலேயே நடத்தலாம். அரச வளங்களைக் கொட்டி அதைச் செய்யலாம். அக்காலகட்டத்தில் வழங்கப்படும் சலுகைகளுக்கான நிதியையும் திறை சேரியிலிருந்து எடுக்கலாம். அதாவது அரச செலவிலேயே ஒரு தேர்தல் பிரச்சாரத்தை முன்னெடுக்கலாம். அப்படிப் பார்த்தால் கொரோனா வைரஸ் ராஜபக்ஷக்களுக்கு நன்மையைக் கொண்டு வந்திருக்கிறதா?

சரியாக ஓராண்டுக்கு முன் இதே காலப்பகுதியில் ஈஸ்டர் குண்டு வெடிப்பு நிகழ்ந்த போது அதன் விளைவுகளை ராஜபக்ஷக்கள் வாக்குகளாகத் திரட்டி கொண்டார்கள். இப்பொழுது கொரோனா வைரஸ் கொண்டு வந்திருக்கும் சவால்களையும் அதன் விளைவுகளையும் ராஜபக்ஷக்கள் வாக்குகளாகத் திரட்ட போகிறார்களா? அதாவது முழு நாட்டுக்கும் தீங்காக காணப்படும் அம்சங்கள் ராஜபக்ஷ குடும்பத்திற்கு நன்மைகளாக முடிகின்றனவா?

நன்றி : ஆதவன் இணையம்

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## அன்றாட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதனை சமுர்த்தி மற்றும் கூட்டுறவு துறைகள் ஊடாக மேற்கொள்ள வேண்டும் எனவும் பணித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக இன்றையதினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற விசேட உயர்மட்டக் கூட்டத்தின்போது, ஊரடங்குச் சட்டத்தால் முடக்கப்பட்டுள்ள - நாளாந்த வருமானம் பெறும் குடும்பங்களின் நிலைமைகள் தொடர்பில் ஆராயப்பட்டபோதே அமைச்சர் இவ்வாறு பணித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் பேச்சுக்களை நடத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு உலர் உணவு உள்ளிட்ட நிவாரணங்களை வழங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## சுவிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், யாழ்ப்பாணத்தில் போதகர் பங்கேற்ற நிகழ்வுகளில் கலந்துகொண்ட அனைவரையும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தி கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துமாறு அதிகாரிகளிடம் கேட்டுள்ளார்.

போதகருக்கு கொரோனா ரைவஸ் தொற்றுள்ளமை தொடர்பான பரிசோதனை நேர்மறை (Positive) என வந்துள்ளது. ஆனால் அவர் சுகமாக உள்ளார். நாம் அவர் சுகமடைவதற்காக விசுவாசிக்கின்றோம். போதகருக்கு கொரோனா தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்ட தகவலைப் பொலிஸார் உள்ளிட்டவர்களுக்கு வழங்க முடியும் என்று அவரது உதவிப் போதகர் யோசுவா ராஜநேசன் தெரிவித்தார்.

இந்தத் தகவலை யாழ்ப்பாண போதகரிடமிருந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் பெற்றுக்கொண்டார்.

இது தொடர்பில் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிடோருக்கு விடயத்தைத் தெரியப்படுத்திய அங்கஜன் இராமநாதன், உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுக்குமாறு கேட்டுள்ளார்.

சுவிஸ்சர்லாந்துப் போதகர் யாழ்ப்பாணத்தில் பங்கேற்ற நிகழ்வுகள், அவர் சென்று வந்த இடங்கள் உள்ளிட்டவற்றில் தொடர்புடைய அனைவரையும் தனிமைப்படுத் தலுக்குட்படுத்தி யாழ்ப்பாணத்தில் கொரோனா வைரஸ் அச்சநிலையைப் போக்குமாறும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் அதிகாரிகளிடம் கேட்டுள்ளார்.

(ஐ-07)

## வெளிநாட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் என்பதோடு, 17பேர் வெளிநாட்டிலிருந்து வருகை தந்த நபர்களுடன் நெருக்கமான தொடர்பைக் கொண்ட நபர்கள் ஆவர். எஞ்சியோருக்கு நோய் ஏற்பட்ட முறை குறித்த விடயங்கள் ஆராயப்பட்டு வருகின்றன.

தற்பொழுது இலங்கையில் 22 தனிமைப்படுத்தும் மத்திய நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை 3,063 என்பதோடு, இவர்களுள் 31 பேர் வெளிநாட்டவர்கள் ஆவர்.

இது தவிர சுகாதாரப் பிரிவு இராணுவம், புலனாய்வுப் பிரிவு பொலிஸ் மற்றும் பொது மக்கள் சுகாதார பரிசோதகர்களினால் அடையாளங் காணப்பட்ட, சுமார் 10,000 பேர் சுய தனிமைப் படுத்தல் நடவடிக்கைகளைக் கடைப்பிடித்து செயல்படுவதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. (ஐ)

## தேர்தல் நடத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆங்கில வாரஇதழான 'சண்டே ரைம்ஸ்' தனது பிரபல அரசியல் பத்தியில் தகவல் வெளியிட்டிருக்கின்றது.

அறிவிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு வாய்ப்பான ஆகப் பிந்திய கடைசி தினம் இதுவே என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

( மேலதிக விவரங்களுக்கு இன்றைய மாலைப் பைப்பின் ஆசிரிய தலையங்கத்தைப் பார்க்க)

## கேப்பாபுலவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வடக்கில் உள்ள ஸ்ரீலங்கா விமானப்படையின் விமான நிலையங்கள் அமைந்துள்ள பகுதிகளில் தனிமைப்படுத்தல் நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன என ஸ்ரீலங்கா விமானப்படை அறிந்துள்ளது.

இந்த நிலையில் இந்தியாவின் பௌத்த புனித இடமான புத்தகயாவுக்கு யாத்திரை சென்று நாடு திரும்பிய பௌத்த பிக்குகள் உட்பட நூற்றுக்கணக்கான பொதுமக்கள் 5 சொகுசு பஸ்களில் விமானப்படையினரின் பாதுகாப்புடன் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இவர்களைத் தனிமைப் படுத்தும் நடவடிக்கையில் விமானப் படையினர் ஈடுபட்டுள்ளார்கள்.

இந்நிலையில் நேற்றும் முல்லைத்தீவு கேப்பாபுலவு விமானப்படைத் தளத்தில் அமைக்கப்பட்ட தனிமைப்படுத்தல் நிலையத்தில் இந்தியாவில் இருந்து வருகைதந்த 41 பேர் அழைத்து வரப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 7,452 வேட்பாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாட்டின் 22 தேர்தல் மாவட்டங்களிலும் சுமுகமான வேட்புமனு கையளிப்பு இடம்பெற்றது. கொரோனா அச்சம் காரணமாக, அனைத்து மாவட்ட செயலகங்களிலும் போதுமான தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

மாவட்ட செயலகத்திற்குள் நுழைவதற்கு வேட்புமனு தாக்கல் செய்பவர்களுடன் வரையறுக்கப்பட்டவர்களே அனுமதிக்கப்பட்டனர். உள்நுழையு முன்னர் கைகளை சுத்தப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

19 ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் வேட்புமனு கையளிக்கும் காலம் நிறைவடைந்தது. இதன் பின்னர் ஆட்சேபனைக் காலம் ஒதுக்கப்பட்டது. இதன்போது, சில சுவாரஸ்யமான சம்பவங்கள் நடந்தன. யாழில் சமர்ப்பிக்கப்படும் வேட்புமனுக்களில் 10 வேட்பாளர்களின் பெயர் உள்ளடக்கப்பட வேண்டும். ஆனால் சுயேச்சைக்குழு ஒன்று 11 வேட்பாளர்களுடன் வேட்புமனு கையளித்தது. அதே போல, மட்டக்களப்பில் 8 பேருடன் வேட்புமனு கையளிக்கப்பட வேண்டும். தமிழ் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர் இரா. சாணக்கியனினால் இரகசியமாக களமிறக்கப்பட்ட சுயேச்சைக்குழு 7 வேட்பாளர்களுடன் பட்டியல் சமர்ப்பித்தது.

இதேபோல, கிளிநொச்சியில் முன்னாள் எம்.பி மு.சந்திரகுமாரின் கேடயம் சின்னத்தை குறிவைத்து, தமிழ் தேசிய கூட்டமைப்பின் பின் புலத்தில் டம்மி சுயேச்சைக் குழுவொன்றை இறக்கியிருந்தது.

தேர்தல்கள் ஆணையாளர் சாதகமான மனநிலையுடனே முறைப்பாடுகளை அணுகியிருந்தார். ஒவ்வொரு கட்சியின் வேட்புமனுவையும் நிராகரிக்காமல், இயன்றவரை அங்கீகரிக்க வேண்டுமென்பது அவரது அணுகுமுறை. அதனால் பல போட்டி மனப்பான்மையுடனான முறைப்பாடுகள் நிராகரிக்கப்பட்டன.

வேட்புமனு கையளிக்கும் காலப்பகுதியில் 339 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் 358 சுயேச்சைக் குழுக்கள் வேட்புமனுக்களை கையளித்திருந்தன. இதில் 35 அரசியல் கட்சிகளினதும், 45 சுயேச்சைக் குழுக்களினதும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. இதன்படி, 309 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 3,652 பேரும், சுயேச்சைக் குழுக்களை சேர்ந்த 3,800 பேருமாக 7,452 வேட்பாளர்கள் 22 தேர்தல் மாவட்டங்களில் தேர்தலில் போட்டியிடுவார்கள்.

225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் 196 இடங்களுக்கு அவர்கள் போட்டியிடுவார்கள். ஏனைய 29 இடங்கள் தேசிய பட்டியல் ஆசனங்களாகும்.

கொழும்பு மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். அங்கு 924 பேர் களத்தில் உள்ளனர். அடுத்த அதிக எண்ணிக்கையுள்ள கம்பஹாவில் 693 பேர் போட்டியிடுகிறார்கள். திகமடுல்ல மாவட்டத்தில் 540 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். கண்டியில் 435 பேர் போட்டியிடுகின்றனர். வன்னியில் 405 பேர், குருநாகல் 396 பேர், புத்தளம் 352 பேர் போட்டியிடுகின்றனர்.

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ்.போதனா வைத்தியசாலையில் சிசிச்சை பெற்று வரும் இவருக்குக் கொரோனா தொற்று உள்ளமை மருத்துவப் பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து சுவிஸ் போதகர் யாழ்ப்பாணம் வந்திருந்தவேளை அவருடன் பழகியவர்கள், ஆராதனையில் பங்கேற்றவர்கள் ஆகியோரைத் துரித கதியில் அடையாளம் கண்டு தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் சுகாதாரத் திணைக்களத்தினரும் பொலிஸாரும் இறங்கியுள்ளனர்.

இவ்வாறானவர்களை உடனடியாகத் தேடிப்பிடித்து தனிமைப்படுத்துவதன் மூலம் யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்று மேலும் பரவாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளைத் துரிதமாக முன்னெடுப்பதற்கு ஏற்பாடாகியியுள்ளது.

யாழ்ப்பாணத்திலும் கொரோனா நோயாளி ஒருவர் அடையாளம் காணப்பட்டார் என்ற செய்தி ஊடகங்களிலும் சமூக வலைத் தளங்களிலும் பரவியதை அடுத்து மக்கள் மத்தியில் அச்ச நிலை ஏற்பட்டது.

யாழ்ப்பாணம் வந்த சுவிஸ் போதகர் சென்ற இடங்களில் வசிக்கும் மக்கள் இதனால் அச்சத்துக்குள்ளாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனாலும் மக்கள் அச்சப்படவேண்டியதில்லை என்றும், வீடுகளுக்குள் இருந்து தம்மை சுய தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்துவதன் மூலம் நோய் தொற்றில் இருந்து விடுபடமுடியும் என்றும் மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

சுவிஸ் போதகர் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது அவரது ஆராதனையில் பங்கேற்ற 137 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். போதகர் யாழ்ப்பாணத்தில் இருந்த வேளை அவருடன் நெருங்கிப் பழகிய ஒருவருக்கே தொற்று அடையாளம் காணப்பட்டுள்ளது. அவர் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

அரியாலை கண்டி வீதியில் அமைந்துள்ள பிலதெல்பியா தேவாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சுவிஸ் நாட்டிலிருந்து வருகை தந்த போதகர் போல் சற்குணராசாவால் சிறப்பு வழிபாடு நடத்தப்பட்டது. போதகரை அறை ஒன்றில் சந்தித்துப் பேசிய ஆண் ஒருக்கே இவ்வாறு கொரோனா தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப் படுத்தப்பட்டுள்ளது. அவர் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். அவர் மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்பில் உள்ள வைத்தியசாலைக்கு இன்று மாலை மாற்றப்படவுள்ளார் என்று யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அடையாளம் காணப்பட்ட முதல் நோயாளி தாவடியைச் சேர்ந்த கட்டட ஒப்பந்தகாரர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-07)

## ஆராதனையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நாளை ஊரடங்குச் சட்டம் தற்காலிகமாக தளர்த்தப்படும்போதும் அவர்கள் 137 பேரும் தமது தனிமைப்படுத்தலில் இருந்து வெளியேறாமல் தடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் அரியாலை கண்டி வீதியில் அமைந்துள்ள பிலதெல்பியா தேவாலயத்தில் கடந்த 15 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற ஆராதனையில் தலைமை தாங்கிய சுவிஸ்சர்லாந்து போதகர் தனது நாட்டுக்குத் திரும்பிய நிலையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி யிருக்கிலாம் என்ற சந்தேகத்தில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அதனால் அந்த ஆராதனையில் கலந்து கொண்டவர்களுக்கும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. அவர்களில் 137 பேரே இவ்வாறு சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

நாட்டில் அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து யாழ்ப்பாண மக்களை பாதுகாப்பதற்காக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயும் சிறப்புக் கூட்டம் இன்று இடம்பெற்றது.

கடற்தொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ்ப்பாணத்தில் உள்ள வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் இன்று முற்பகல் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன், வடமாகாண சமுதாய மருத்துவ நிபுணர் ஆர்.கேசவன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி, வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் செந்தில்நந்தன், யாழ்ப்பாணம் மாவட்ட உதவி அரச அதிபர் ம.பிரதீபன், யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் தேவநேசன், யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் இ.ஜெயசீலன், கரவெட்டி பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி செந்தூரன், ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி பரா. நந்தகுமார், வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் போ.வாகிசன், இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகள், மாவட்ட சமூர்த்தி உத்தியோகத்தர், யாழ்ப்பாணம் வணிகர் கழகத் தலைவர் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

(ஐ-07)

# அரசுகள், ஆட்சிகள் மாறுகின்றன; ஆயினும் அரசியல் கைதிகளின் நிலைமை மாறவில்லை

## விசனம் தெரிவிக்கிறார் சிவசக்தி ஆனந்தன்



வவுனியா,மார்ச்22

ஆட்சிமாற்றங்கள் இடம்பெற்றுவருகின்றபோதும் தமிழ் அரசியல் கைதிகளின் வாழ்க்கையிலோ அல்லது அவர்களின் கோரிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்தின் மனநிலையிலோ மாற்றங்கள் ஏற்பட்டதாக இல்லை.

இவ்வாறு விசனம் தெரிவிக்கிறார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன்.

இது தொடர்பாக நேற்று அவர் விடுத்த அறிக்கையின் விவரம் வருமாறு: –

தற்போது முழு நாடுமே கொரோனா வைரஸின் அச்சத்திற்கு உள்ளாகியுள்ளது. குறிப்பாக சிறைக் கைதிகள் அனைவருமே இந்த வைரஸின் தாக்கம் ஏற்பட்டு விடும் என்ற பதற்றமான மனநிலையுடன் அண்மைய நாள்களை கழித்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அண்மையில் பாரிய குற்றங்களை இழைத்த குற்றவாளிகள் மற்றும் மரண தண்டனை விதிக்கப்படவர்களின் சிறைக்கூடத்திற்கு மாற்றப் பட்டுள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகள் தமக்கான சிறைக் கூடங்களை சரியாக பராமரித்து சுத்தமாக பேணி வந்த நிலையில் அவர்களை வேறுகூடங்களுக்கு மாற்றி நெருக்கடியான சூழலில் வைக்கப்பட்டமையானது கண்டிக்கத்தக்கதாகும்.

சனியன்று அநுராதபுர சிறைச்சாலையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களால் தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்பும் கேள்விக்குறியாக்கப் பட்டுள்ளது. அவர்கள் பயங்கரவாத தடைச்சாட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் அவர்கள் மீது வழக்குகள் பதியப்பட்டு நீண்டகாலமாக சிறைச்சாலைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவர்களின் வாழ்க்கையில் அரைவாசிக்கும் அதிகமான காலத்தினை சிறைகளிலேயே கழித்துள்ள நிலையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் தமது விடுதலையை வலியுறுத்தியபோதும் அவை பாராமுகமாகவே அணுகப்பட்டுள்ளன.

நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டும் அவர்களின் உயிர்ப்பாதுகாப்பினை கவனத்திற்கொண்டும் தற்காலிகமாக நிபந்தனை களுடன் கூடிய பிணை வழங்குவதற்கு ஜனாதிபதி கோத்தாபயராஜபக்ஷ தலைமையிலான அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அவ்வாறான நடவடிக்கையொன்றே தமிழ் அரசியல் கைதிகளின் உயிர்பாதுகாப்பினை உறு திப்படுத்தவதாகவும் அவர்களின் வருகைக்காக ஏங்கிக்கொண்டிருக்கும் அன்புக்குரிய உறவுக ளுக்கு நிம்மதி அளிப்பதாகவும் இருக்கும்.

கொரோனாவின் தாக்கம் உலகளாவிய ரீதியில் அதிகரித்தபோது, ஈரான் அரசு தனக்கு எதிராக கிளர்ச்சி செய்தவர்கள், போராட்டங்களை நடத்திய குற்றச்சாட்டில் சிறையில் அடைத்திருந்த ஆயிரக் கணக்கானவர்களை நிபந்தனையின் அடிப்படை யில் விடுவித்தது.

மேலும், இத்தாலி, இந்தியா உள்ளிட்ட நாடுகளில் உயிர் அச்சம் காரணமாக சிறைக்கைதிகள் போராட்டங்களை முன்னெடுத்தமையால் பதற்றமான சூழலும் ஏற்பட்டிருந்தது. ஆகவே இவ்வாறான முன்னுதாரணங்கள் தொடர்பில் கரிசனை கொண்டு உரிய நடவடிக்கைகளை உடன் எடுக்குமாறு கோருகின்றேன். – என்று தெரிவிக்குப்பட்டுள்ளது.

# மாற்றுத்திறனாளிகலுக்கும் பாதிக்கப்பட்டோருக்கும் நெருக்கடிச் சூழலில் அவசர உதவிகள் வழங்குங்கள்

## தமிழ் மாற்றுத்திறனாளிகள் அமைப்பு பகிரங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச்22

கொரோனாத் தொற்று நெருக்கடிக்கு மத்தியில் துன்பத்தில் நின்றுழலும் மாற்றுத்திறனாளிகள் உட்பட பாதிக்கப்பட்டோருக்கு அவசர உதவிகள் வேண்டும் எனத் தமிழ் மாற்றுத்திறனாளிகள் அமைப்பு பகிரங்கக் கோரிக்கை விடுத்திருக்கின்றது.

இது தொடர்பாக அமைப்பின் பணிப்பாளர் ச.அரவிந்தன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பட்டவை வருமாறு:–

கொரோனாவின் பாதிப்பு உலகளாவிய ரீதியில் மிகவும் கடுமையாக ஏற்பட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில் ஏற்கனவே பல்வேறு வகையில் பாதிக்கப்பட்டு அன்றாட வாழ்வை மிகவும் சிரமத்தின் மத்தியில் நடாத்தி செல்லும் –

1.மாற்றுத்திறனாளிகள்.
2.பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள்.
3. பெண்தலைமைத்துவ குடும்பங்கள்.

– போன்றோர் வாழ்வை கொண்டு செல்வதற்கான அவசர உதவிகளை அரசும், அரச சார்பற்ற நிறுவனங்களும், புலம்பெயர்ந்த மக்களும் வழங்கி உதவ முன்வர வேண்டும் என அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

வடக்கில் 20,011 மாற்றுத்திறனாளிகளும், கிழக்கில் 18,001 மாற்றுத்திறனாளிகளும் இருக்கின்றார்கள் என்ற நிலையில் அவர்களில் கணிசமானவர்கள் முற்றிலும் உழைக்கும் வலுவற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள்.

கொரோனாவின் பாதிப்பு காரணமாக ஊரடங்கு மற்றும் பல்வேறு சமூகக் கட்டுப்பாடுகள் இருக்கின்ற நிலையில் அவர்களின் வாழ்வு மிகவும் சிரமத்துக்குள்ளானதாகவே இருக்கின்றது.

அதேவேளை பாதிக்கப்பட்டோர் சிறு சிறு வியாபார முயற்சிகளை முன்னெடுத்துத் தமது குடும்பத்தை நடாத்தி வருகிறார்கள். அவ்வாறான வியாபார முயற்சிகளும் இந்த சந்தர்ப்பத்தில் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றன.

இந்த நிலையில் அவர்களுக்கு நீண்டகாலமாக உதவிவரும் அரசும், புலம்பெயர்ந்த மக்களும் இம்முறை உதவிகளை இன்னும் சில மடங்கு அதிகரித்து மக்களின் மிகவும் கடுமையான காலப் பகுதிகளை கடந்து செல்வதற்கு உதவ முன்வர வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

ஏற்கனவே அரசின் மாதாந்தக் கொடுப்பனவுகளை பெறுபவர்களுக்கு அரசு மாதாந்த கொடுப்பனவை அதிகரித்து ஓர் அவசர நிதியாகக் கொடுப்பதன் மூலமும் அதேவேளை அரச நிதி வழங்கலில் இதுவரை சேர்த்துக் கொள்ளப்படாதவர்களும் ஓர் அவசர நிலையைக் கருத்தில் கொண்டு சேர்க்கப்பட்டு அவர்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்கு வழிவகைகளை செய்வதன் மூலமும் இந்தப் பெரும் துன்பமான காலத்தை கடப்பதற்கு உதவியாக இருக்க முடியும்.

அதேவேளை புலம்பெயர் உறவுகள் தாங்கள் இதுவரை காலமும் இணைந்து பணியாற்றும் தொண்டு நிறுவனங்களுக்கு ஒருபடி அதிகமாகவே உதவிகளைச் செய்து அந்த அமைப்பின் உறுப்பினர்கள் இந்தக் கடுமையான காலத்தைக் கடந்து செல்வதற்கு உதவி புரிய வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

அரச தரப்பினர் பாதிக்கப்பட்டவர்களின் அமைப்புக்களுடன் பேசி அந்த அமைப்பின் உறுப்பினர்களுக்கு உதவிட வேண்டும்.

ஏலவே துன்பத்தில் நின்றுழலும் சமூகம் கொரோனாவின் கொடுமையையும் தாங்கித் தவிக்க வேண்டியுள்ளது. – என்று உள்ளது.

# போதகரின் ஆராதனையில் பங்கேற்ற எட்டு பேர் வவுனியாவில் கண்டுபிடிப்பு

வவுனியா, மார்ச் 22

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மத போதனையில் கலந்துகொண்ட ஒன்றரை வயதுக் குழந்தை உட்பட 8 பேர் வவுனியாவில் நேற்று இணங்காணப்பட்டுள்ளனர்.

அவர்களைத் தனிமைப்படுத்தி மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி யாழ்ப்பணம், செம்மணி, இளையதம்பி வீதியில் உள்ள பிலதெல்பியா தேவாலயத்தில் மதபோதனையை நடத்திய போதகர் சுவிஸ் திரும்பிச்சென்ற நிலையில் கொரோனா நோயாளியாக இனங்காணப்பட்டுள்ளார்.

அவருடன் நெருங்கிப் பழகிய ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் அந்த ஆராதனையில் ஈடுபட்டவர்களைத் தனிமைப்படுத்தி மருத்துவபரிசோதனையைமேற்கொள்ள சுகாதார சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைவாக அந்தப் போதனையில் கலந்து கொண்ட வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் பகுதிகளைச் சேர்ந்தவர்களைத் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஊரடங்கு சட்ட நேரத்திலும் விரைந்து செயற்பட்ட வவுனியா வடக்கு பொதுச் சுகாதார மேற்பார்வைப் பரிசோதகர் மேஜெயா, புளியங்குளம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நிசாந்தன் உள்ளிட்ட குழுவினர் புளியங்குளம் வடக்கு, முத்துமாரி நகர் பகுதியில் வசித்து வந்த நிலையில் குறித்த போதனையில் கலந்து கொண்ட ஒன்றரை மாத குழந்தை உள்ளிட்ட 6 பேரையும், நெளுக்குளம், காத்தான் கோட்டம் பகுதியில் வசிக்கும் இருவரையும் இணங்கண்டு அவர்களை கொரோனா தொற்று தொடர்பான மருத்துவப் பரிசோதனைக்காக தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# வெளிநாடு சென்று திரும்பியோர் சுயமாக கண்காணிப்புக்கு முன்வர கால அவகாசம்

## தவறிக் கைது செய்யப்பட்டால் 3 வருடச் சிறை

வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பி தனிமைப்படுத்தல் மருத்துவ கண்காணிப்பிற்கு உட்படாமலிருப்பவர்கள் தாமாக கண்காணிப்பிற்கு முன்வருவதற்கு 48 மணித்தியாலங்கள் கால அவகாசம் வழங்க்கப்பட்டுள்ளது.

இதற்குத் தாமாக முன்வராதவர்கள் பாதுகாப்பு துறையினரால் இணங்காணப்பட்டால் 3 வருட சிறை தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதற்கமைய வெளிநாடுகளிலிருந்து வருகை தந்தவர்கள் நாளை மறுதினம் 24 ஆம் திகதி செவ்வாய்கிழமை நள்ளிரவு 12 மணிக்கு முன்னர் பிரதேச பொது சுகாதார பரிசோதகர்கள் அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகுமாறு கோரப்பட்டுள்ளது.

அதன் பின்னர் அந்த நபர்கள் 14 நாகள் தனிமைப்படுத்தல் மருத்துவ கண்காணிப்பிற்கு உட்படுத்தப்படுவர். வெளிநாடுகளிலிருந்து வருகை தந்து கண்காணிப்பிற்கு உட்படாமலிருப்பவர்களுக்கு இதுவே இறுதி வாய்ப்பாகும்.

இதே வேளை இந்த அறிவித்தை கவனத்தில் கொள்ளாதவர்கள் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் பாதுகாப்பு துறையினரால் இணங்காணப்பட்டு மருத்துவ கண்காணிப்பு மற்றும் தொற்று நோய் அகற்றல் சட்டத்தின் கீழ் 3 வருடங்கள் சிறை தண்டனைக்கு உட்டுப்படுத்தப்படுவார்கள். அத்தோடு 14 நாள்கள் சிறைச்சாலை வைத்தியசாலையில் தனிமைப்படுத்தப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.03.2020 இல் வெளியிடப்பெற்றது.